Regd with the Registrar of Newspapers for India No. TN TAM/2007/22101
Regd. TN/CC(S)Dn/326/13-15












Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

Vol. 6
Issue. 7
தனிப்பிரதி ரூ20/=
மார்ச் 2013



# மனந்திரும்புதல்



- சகோதரி. **நிஜா கென்னடி**

**ம**னுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்திற்கு விசனமாயிருந்தது (ஆதியாகமம் 6:5,6). நோவா வாழ்ந்த காலத்தில் மனிதர்கள் அனைவரும் பெரும் பாவிகளாக இருந்தார்கள். பாவ எண்ணங்களோடிருந்தனர். கர்த்தர் இதைப்பார்த்து, மனிதனை உண்டாக்கினதற்காக வருந்தினார். மனிதர்கள் தேவனைத் தேடாமல், தேவனுடைய வழியில் செல்லாமல் சுயவழியில் சென்று, பாவத்தில் விழுந்தனர். பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுக்கு கீழ்ப்படியாமல் தங்களுடைய பார்வைக்கு சரியாக தோன்றுகிற வழியில் சென்று கொண்டிருந்தார்கள். தேவனை தேட வேண்டும், அவருக்கு பிரியமான வழியில் செல்ல வேண்டும் என்கிற உணர்வில்லாமல் இருந்தனர். மனிதர்கள் தன்னோடு ஐக்கியம் கொள்ளாமல், பாவ வழியில் சென்றதற்காக தேவன் வேதனைப்பட்டார். பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதனும், தேவனோடுகூட ஐக்கியமாய் இருக்கவே தேவன் விரும்பினார். அதற்காகவே மனிதனை உண்டாக்கினார்.

**பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள்** (ஆதியாகமம் 6:11,12). ஜனங்கள் பாவம் செய்து, பாவ உணர்வில்லாதவர்களாய், கொடூரமானவர்களாய், வன்முறையில் ஈடுபட்டு தங்களை கெடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மோசமான நடத்தையுள்ளவர்களாய், ஒழுக்கமில்லாத வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். கர்த்தர் அருவருக்கும் காரியங்களை செய்தனர். கர்த்தர் ஜனங்களின் செயல்களைப் பார்த்து, வெறுப்படைந்தார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் கர்த்தரை அவமதித்தனர். தேவனுடைய வார்த்தைக்கு எதிராக செயல்பட்டனர். தேவனுக்கு கோபம் உண்டாக்கக்கூடிய மோசமான செயல்களைச் செய்தனர். ஒருவரையொருவர் தாக்கி, மற்றவர்களுக்கு கேடு உண்டாக்கும் காரியங்களைச் செய்து, இரக்கமற்றவர்களாக நடந்தார்கள். விபச்சாரம், வேசித்தனம் பண்ணி, இச்சைகளுக்கு அடிமைப்பட்டிருந்தனர். சட்டத்திற்கு மாறாக நடந்து உண்மையான பாதையை விட்டு விலகி, வழிதவறிச் சென்றார்கள். தேவனைத்தேடாமல் வாழ்ந்து வந்தனர். அதனால் கர்த்தர் பூமியில் மனிதனை உண்டாக்கினதற்காக வருந்தினார். அதனால் கர்த்தர் தாம் உண்டாக்கின பூமியை அழிக்கச் சித்தங்கொண்டார். ஆனால், நோவா மட்டும் கர்த்தருக்குப் பிரியமான வழியில் நடந்தான்.

**நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்** (ஆதியாகமம் 6:9). கர்த்தர் நோவாவிடம் ஜனங்களின் பாவத்தினால் தாம் பூமியை அழிக்கப் போவதாகக் கூறினார். மேலும் ஒரு பேழையை உண்டாக்கும்படி கூறி, அதைப் பண்ண வேண்டிய விதத்தையும் கூறினார். பூமியில் நாற்பது நாள் இரவும், பகலும் மழையை பெய்யப் பண்ணுவேன். நீயும் உன் குடும்பத்தார் அனைவரும், பூமியிலுள்ள அனைத்து உயிர்களிலும் ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும் உன்னுடன் பேழைக்குள் காக்கப்பட வேண்டும் என்றார்.

நோவா தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து முடித்தான். தேவன் சொன்னபடியே பூமியின்மேல் வெள்ளம் வந்தது. பூமியிலுள்ள அனைத்து ஜனங்களும் அழிந்து போனார்கள். நோவாவையும் அவன் குடும்பத்தாரையும் பேழைக்குள் வைத்து கர்த்தர் காப்பாற்றினார்.



நோவா கர்த்தர் சொன்ன வார்த்தையை விசுவாசித்து, அதற்கு கீழ்ப்படிந்து பேழையை உண்டாக்கினான். தேவனை நேசித்து, அவரோடு ஐக்கியமாய் இருந்தான். தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். கர்த்தர் சொன்னதை அப்படியே நம்பி, பேழையை செய்ய தனது நேரத்தையும், கவனத்தையும் செலுத்தினான். உள்ளார்ந்த ஈடுபாட்டோடு, பொறுமையோடு கர்த்தர் சொன்னபடியே செய்து முடித்தான். கர்த்தர் சொன்னதற்கு முரணாக செய்யாமல், மாறாமல் கர்த்தரோடு ஒத்துப் போனான்.

அவனைச் சுற்றி இருந்தவர்கள் அனைவரும் தீயக்காரியங்களைச் செய்து பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால், நோவா தேவனை விசுவாசித்து, நீதிமானாக, உண்மையுள்ளவனாக தேவனைப் பின்பற்றி வாழ்ந்தான். தன்னை சுற்றியிருந்த ஜனங்களுக்கு முன்மாதிரியாக இருந்து, அவர்களுக்கு நீதியைக் குறித்து பிரசங்கம் பண்ணினான் (2 பேதுரு 2:5). சரியான வழியில் வாழ ஜனங்களுக்கு போதித்தான். ஆனால், அந்த ஜனங்களோ அதற்கு கீழ்ப்படியவில்லை. நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள்

புசித்தும் குடித்தும், பெண்கொண்டும், பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும், உணராதிருந்தார்கள். அவர்கள் தேவனோடு ஐக்கியமாய் இருக்க விரும்பாமல், அவரைப் பின்பற்றாமல் பாவத்தில் ஈடுபட்டார்கள். **மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்** (நீதிமொழிகள் *14:12*).

தேவனுக்கு எதிரான காரியங்களைச் செய்தவர்களை தேவன் தண்டித்தார். வெள்ளத்தால் அவர்களை அழித்துப் போட்டார். நோவாவும், அவனது மூன்று மகனும், மருமக்களும் ஆகிய எட்டுபேர் தவிர அனைத்து ஜனங்களும் அழிக்கப் பட்டார்கள்.

நம்முடைய வாழ்க்கையிலும், தேவனுடைய எச்சரிப்பு கர்த்தருடைய பிள்ளைகள் அல்லது தீர்க்கதரிசிகள் மூலமாக கடந்துவரும்போது, தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்க நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். தேவன் நம்மை எச்சரித்தும், நாம் கீழ்ப்படியாமல் போகும்போது, தேவகோபம் நம்மேல் வர நாமே காரணமாகி விடுகிறோம். நம்மைத் தாழ்த்தி வார்த்தை என்ன சொல்லு கிறதோ அதன்படி நடக்க முற்றிலுமாக நம்மை ஒப்புக்கொடுப்போம். நோவா வின் காலத்தில் மக்கள் நடந்ததுபோல, நாம் நடக்காதிருப்போம். தேவன் வெறுக்கும் பாவங்கள் நம்மிடத்தில் உண்டா?

நோவா தேவனுக்கு பிரியமாய் நடந்தான். தேவனுடைய மனது விரும்பியபடி, அவரது மனதுக்குகந்தவனாக வாழ்ந்தான். பாவத்தில் வாழ்ந்த ஜனங்களின் மத்தியில் இருந்தபோதும், தேவனை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படிந்து நடந்தான். அதனால் தேவனுடைய கண்களில் அவனுக்கு தயவு கிடைத்தது. நாமும் பாவம் நிறைந்த உலகத்தில் வாழ்கிறோம். நோவாவைப் போல தேவனுக்கு கீழ்ப்படிந்து நீதிமானாய் வாழ்ந்து, பெரும் அழிவிலிருந்து விலக்கி நம்மையும் நம் குடும்பத்தையும் காத்துக்கொள்வோம்.

இன்றைக்கும் அநேகர் சட்டத்திற்கு மாறாக நடக்கிறார்கள். லஞ்சம் வாங்கிக் கொண்டு நேர்மையற்ற செயல்களை செய்கிறார்களை. பணத்தை குறுக்கு வழியில் சம்பாதிக்கிறார்கள். மாம்ச இச்சையினால் ஒழுக்கக்கேடாக நடந்து தங்கள் பரிசுத்தத்தை கெடுத்துக் கொள்கிறார்கள். திருமண நாளில் தேவனுடன் தான் செய்த உடன்படிக்கையை மீறி, வேறொரு நபருடன் தவறான உறவு வைத்துக் கொள்கிறார்கள். பேராசையினால் மற்றவர்களுக்குரியதை துணிகரமாக திருடுகிறார்கள். பொய் பேசுகிறார்கள். வன்முறையிலும் கலவரத்திலும் ஈடுபடுகிறார்கள். மற்றவர்கள்மீது பொறாமைபடுகிறார்கள். கர்த்தர் வெறுக்கும் காரியங்களைச் செய்கிறார்கள். **கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும், தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது** (நீதிமொழிகள் *15:3*).

தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்ட நாம் பாவத்திற்கு விலகி விழிப்புணர்வோடிருக்க வேண்டும். நாம் ஒழுக்கமுள்ளவர்களாக, குற்றமற்ற மனசாட்சியை உடையவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய கட்டளைகளை மீறும்போது பாவம் செய்து, தேவனுக்கு அடங்காதவர்களாகி விடுகிறோம். பாவம் நமக்கு தண்டனையைக் கொண்டு வருகிறது. தேவனுடைய வழியில் செல்ல மனதில்லாதவர்களை தேவன் கைவிட்டுவிடுவார்.

**அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்** (ரோமர் *1:29-32*). மரணத்தை கொண்டு வருகிற பாவங்களை நம்மைவிட்டு அகற்றுவோம்.

லோத்து சோதோமில் குடியிருந்தான். **சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாயிருந்தார்கள்** (ஆதியாகமம் *13:13*). அவர்களுடைய பாவம் மிகவும் கொடியதாயிருந்தது. அவர்களுடைய கூக்குரல் கர்த்தருடைய சமூகத்தில் எட்டியது. சுயவிருப்பத்தை நிறைவேற்றுகிறவர்களாய், ஓரினச்சேர்க்கை பாவத்தில் இருந்தார்கள். ஆணோடு ஆண் சேரும் கொடிய பாவத்தில் ஈடுபட்டிருந்தனர். அதனால் கர்த்தர் அந்த பட்டணத்தை அழித்துப் போடச் சித்தங்கொண்டார்.

லோத்து நீதிமானாக இருந்தான். தேவனுக்கு எதிராக பாவத்தில் இருந்த பொல்லாத ஜனங்களின் மத்தியில் வாழ்ந்து வந்தான். தினமும் அவர்களின் அக்கிரம கிரியைகளைக் கண்டு, கேட்டு வருத்தப்பட்டான்.

இரண்டு தேவதூதர்கள் சோதோமுக்கு மாலையில் வந்தார்கள். லோத்து அவர்களை தன் வீட்டில் இரவில் தங்கும்படி அழைத்து வந்தான். அவர்கள் படுக்கும்முன்னே, சோதோம் பட்டணத்து மனிதராகிய வாலிபர் முதல் கிழவர்மட்டுமுள்ள ஜனங்கள் அனைவரும் நானாதிசைகளிலுமிருந்து வந்து, வீட்டை சூழ்ந்து கொண்டனர். அவர்கள் **லோத்தைக் கூப்பிட்டு: இந்த இராத்திரி உன்னிடத்தில் வந்த மனுஷர் எங்கே? நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்களை எங்களிடத்தில் வெளியே கொண்டுவா என்றார்கள்** (ஆதியாகமம் *19:5*). சோதோமியர் ஓரினசேர்க்கை பாவத்தில் இருந்ததால், அவர்களிடம் தவறாக நடந்து கொள்ள வந்தனர். லோத்து அவர்களிடம், இந்த கெட்ட செயலைச் செய்ய வேண்டாம் என்று அவர்களைக் கேட்டுக் கொண்டான். அவர்களோ லோத்துவை நெருக்கி அவர்களுக்குச் செய்வதைப் பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்பு செய்வோம் என்று சொல்லி லோத்துவை நெருக்கி கதவை உடைப்பதற்கு முயன்றார்கள். வீட்டிற்குள் இருந்த தேவதூதர்கள் லோத்துவை உள்ளே இழுத்து கதவை மூடினார்கள். வெளியில் இருந்த ஜனங்களுக்கு குருட்டாட்டம் பிடிக்கப்

பண்ணினார்கள். அவர்களால் கதவு இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

தேவதூதர்கள் லோத்துவிடம் உன் குடும்பத்திலுள்ளவர்கள் யாராவது, இந்த பட்டணத்தில் இருந்தால், அவர்களை இந்த இடத்திலிருந்து வெளியே அழைத்துக் கொண்டு போ. நாங்கள் இந்த பட்டணத்தை அழிக்கப்போகிறோம் என்றார்கள். லோத்து தன் குமாரத்திகளை விவாகம் பண்ணப் போகிற மருமக்கள்மாரிடம் போய், கர்த்தர் இந்த நகரத்தை அழிக்கப் போகிறார். அதனால் சீக்கிரமாய் இந்த ஸ்தலத்தை விட்டு புறப்படுங்கள் என்று கூறினான். அவனுடைய மருமக்கள்மார், அவன் வேடிக்கையாக பேசுவதாக நினைத்துக் கொண்டார்கள். லோத்துவையும், அவன் குடும்பத்தாரையும் பட்டணத்தைவிட்டு வெளியேறும்படி தேவதூதர்கள் துரிதப்படுத்தினார்கள். அவர்கள் தாமதித்துக்கொண்டிருந்த போது, கர்த்தர் அவர்கள்மேல் வைத்திருந்த இரக்கத்தினாலே அவர்கள் கைகளைப்பிடித்து பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள். அவர்கள் லோத்துவிடம் உன் **ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப்பாராதே; இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார் (ஆதியாகமம் 19:17).**

**கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின்மேலும் கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும, அக்கினியையும் வருஷிக்கப்பண்ணினார். அந்தப் பட்டணத்தையும், அந்தச் சமபூமியனைத்தையும்; அந்தப்பட்டணங்களின் எல்லைக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார். (ஆதியாகமம்**



**19:24,25)** லோத்துவின் மனைவியோ கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் திரும்பிப் பார்த்து, உப்புத் தூணானாள். அவளுடைய ஆசை, விருப்பம் எல்லாம் சோதாமிலிருந்தது. தேவனிடத்திலில்லை. உலக ஆசையினால் நிறைந்திருந்தாள். தான் விட்டுவந்த பொருட்களையும் ஆஸ்திகளையும் நினைத்து திரும்பிப்பார்த்தாள். அவளது இரண்டு குமாரத்திகளும் சோதாமில் வாழ்ந்ததால், அங்குள்ள பாவ பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டனர் (ஆதியாகமம் 19:30-38). ஆதனால் அவர்கள் சந்ததியாருக்கும் சாபம் வந்தது. மோவாபியரும் அம்மோனியரும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிரிகளாக இருந்தனர்.

சோதோமியரின் ஓரினச் சேர்க்கை பாவத்தை கர்த்தர் முற்றிலுமாக வெறுத்தார். அதனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்தது. தேவன்அந்த பட்டணத்தையே அழித்துப் போட்டார். தேவன் வெறுக்கும் பாவங்களுக்கும் ஒழுக்கக்கேடான நடத்தைகளுக்கும் நாம் விலகியோட வேண்டும். தேவ கோபம் நம்மேல் வந்து நம்மை அழித்து விடாதபடி இப்பாவங்களுக்கு நாம் விலகியிருப்போம்.

இயேசு கிறிஸ்து தன்னுடைய வருகையின்போது எப்படி இருக்குமென்று கூறுகிறார்: லோத்தினுடைய



**நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து எல்லாரையும் அழித்துப்போட்டது (லூக்கா 17:28,29).** லோத்துவின் மருமக்கள்மார், லோத்து வேடிக்கையாக பேசுகிறான் என்று நினைத்து அவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். அதனால் அவர்களும் அழிந்துபோனார்கள். நம்முடைய வாழ்க்கையிலும் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாகவோ அல்லது தேவ மனிதர்கள் மூலமாகவோ எச்சரிக்கை கொடுக்கும்போது, நாம் அலட்சியம் பண்ணாமல், கர்த்தரிடம் வந்த வார்த்தையாக நினைத்து அதற்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். நாம் அசட்டை பண்ணி அந்த வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனால், நாமே நம்முடைய அழிவுக்கு காரணமாகி விடுகிறோம். நமக்கு நாமே தீமையை வருவித்துக்கொள்கிறோம்.

லோத்து நீதிமானாய் இருந்தபடியால் கர்த்தர் அவனுக்கு இரங்கி அவனையும், அவன் குடும்பத் தாரையும் காப்பாற்றினார். அவர்களை சோதோமிலிருந்து வெளியேறச் செய்து, அழிந்து போகாதபடி பாதுகாத்தார்.

தேவனுக்கும், உலகப் பொருட்களுக்கும் ஊழியம் செய்யக்கூடாது. பணம், பொருட்கள், ஆஸ்திகளை சேர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு, வாழக்கூடாது. கர்த்தரை நம்பி வாழ வேண்டும். அநேகர் பணத்தை சம்பாதிப்பதற்காக ஓடிக்கொண்டேயிருப்பார்கள். பின் அதை சேர்த்து வைப்பார்கள். நாம் இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்லும் போது, ஒன்றையும் கொண்டு போவதில்லை. லோத்து, சோதோம் நீர்வளமிக்க பட்டணம் என்பதால் அங்கே குடியேறினான். அங்கு நியாயாதிபதியாக இருந்தான். தான் சம்பாதித்த ஆஸ்திகளில் ஒன்றையும்கூட கொண்டு போகமுடியவில்லை. எல்லா வற்றையும் இழந்து போனான். நம்மு டைய வாழ்க்கையில் பணத்துக்கும், உடைமைகளுக்கும் முதலிடம் கொடுக்காமல், கர்த்தருக்கு முதலிடம் கொடுப்போம்.

பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது. உங்கள் சிந்தனைகள் முழுவதும் பணம், பொருள்கள், ஆஸ்திகள் மேல் உள்ளதா? அவற்றை எப்படி பெருக்குவது என்பதைக்குறித்தே சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா? லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள். அவள் உலகத்தோடு ஒட்டிக் கொண்டிருந்தாள். அதனால் முழுமையாக சோதாமை விட்டு வர விரும்பவில்லை. திரும்பிப் பார்க்காமல் ஓடமுடியவில்லை. சோதோமில் வாழ்ந்த வாழ்க்கையை உறுதியாகப் பிடித்துக் கொண்டிருந்ததால், அரை குறை மனதுடன் அதைவிட்டு வந்தாள். நாம் எப்படியாக இருக்கிறோம்? பணத்தை நாம்பி வாழ்கிறோமா? கர்த்தரை நம்பி வாழ்கிறோமா? நம்முடைய ஆசை விருப்பம் எல்லாம் கர்த்தரில் இருக்கிறதா? அல்லது உலக பொருட்கள், வீடு, ஆஸ்திகள் மீது இருக்கிறதா? பேர், புகழ் மீது இருக்கிறதா? உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. தேவனை நேசிக்கிறோமா? உலகப் பொருட்களை நேசிக்கிறோமா?

**இதோ, கெர்வமும், ஆகாரத்திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்; இவைகளே**

அவளிடத்திலும் அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன. சிறுமையும், எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை (எசேக்கி யேல் 16:49). சோதோமின் ஜனங்கள் தற்பெருமை உள்ளவர்களாகவும், அதிகமாக உண்பவர்களாகவும், அதிகமான நேரத்தை வீணாக செலவழிக்கிறவர்களாகவும் இருந்தனர். ஏழைகளுக் கும், ஆதரவற்றவர்களுக்கும் உதவி செய்யவில்லை. துணிகரமான பாவங்களில் ஈடுபட்டார்கள். அதனால் தேவகோபம் அவர்கள்மேல் வந்தது. அவர்கள் செருக்கோடு, இளைப்பாறுதல் உணர்வுடன், சோம்பேறித்தனத்துடன், மற்றவர்களை விடத் தாங்கள் மேலானவர்கள் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருந்தனர்.

பாலியல் பாவங்கள், ஓரினச் சேர்க்கை, திருடு, கொலை ஆகிய பாவங்களை நாம் செய்யவில்லை. அதனால் நாம் சரியான வாழ்க்கையை வாழ்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். தற்பெருமை, பெருந்தீனி, தேவையோடு இருப்பவர்கள் மீது அக்கரைக் கொள்ளாமல், உதவி செய்யாமல் இருப்பது ஆகிய இந்தப் பாவங்களையும் நாம் செய்யக்கூடாது என்று தேவன் கட்டளையிடுகிறார். நமக்கு அருகாமையிலோ, நம் கண்முன்னாலோ, அல்லது நமக்கு அறிந்திருந்த நபர்கள் தேவையோடு உதவியற்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, நாம் அவர்களுக்கு உதவி செய்யாமல் நம் இருதயத்தை அடைத்துக்கொண்டோமானால் தேவகோபத்துக்குள்ளாகி விடுகிறோம். இப்பாவங்கள் நம்மிடம் இருந்தால் இன்றைக்கே மனந்திரும்புவோம்.

**அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப்போய், அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார்** (யோனா 1:1,2). அசீரியாவின் தலைநகரமான நினிவே பட்டணத்திலுள்ள ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தனர். கர்த்தருக்கு எதிராக தீய செயல்களைச் செய்ய திட்டமிட்டார்கள் (நாகூம் :9). தங்கள் சுய ஆதாயத்திற்காக உதவியற்றவர்களை நேர்மையற்ற முறையில் நடத்தினர். இரக்கமில்லாமல், மற்றவர்கள் மனது வேதனைப்படும்படியாக நடந்து கொண்டார்கள். கொடுமையான காரியங்களைச் செய்தார்கள் (நாகூம் 2:12,13). விக்கிரகாராதனை, விபச்சாரம், பில்லிசூனியம், மாந்திரீகம் செய்து மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் காரியங்களைச் செய்தார்கள் (நாகூம் 3:4).

யோனா நினிவேக்குப் போய், இன்னும் நாற்பது நாட்களுக்குள் நினிவே நகரம் அழிக்கப்படும் என்று பிரசங்கம் பண்ணினான். ஜனங்கள் செய்த பாவத்திற்கு தண்டனையாக நகரமே





அழிக்கப்படும் என்று எச்சரித்தான். தேவனிடத்திலிருந்து வந்த வார்த்தையை ஜனங்கள் விசுவாசித்தார்கள். கீழ்ப்படிய தங்களை அர்ப்பணித்தார்கள். அங்குள்ள ஜனங்களும் ராஜாவும், தாங்கள் செய்த பாவத்தை நினைத்து மனம் வருந்தினார்கள். தங்களை தாழ்த்தி, உபவாசித்து கர்த்தரை நோக்கி உரத்த சத்தமாய் கூப்பிட்டார்கள். அவரவர் தம்தம் பொல்லாத வழியையும், வன்முறை செயலையும் விட்டு மனந்திரும்பினார்கள். மனந்திரும்பினால் தேவன் தங்களை அழிக்கமாட்டார் என்று ஜனங்கள் விசுவாசித்தார்கள்.

**அவர்கள் தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்** (யோனா3:10). ஜனங்கள் மனந்திரும்பியதால், தேவனது இரக்கம் அவர்கள்மேல் வந்தது. தேவனுடைய தண்டனை அவர்கள்மேல் வரவில்லை.

பிரியமானவர்களே! நினிவே ஜனங்கள் பொல்லாதவர்களாய் இருந்தும்கூட தேவனுடைய வார்த்தையை உடனே ஏற்றுக் கொண்டார்கள். பாவ உணர்வடைந்து, உடனே மனந்திரும்பினார்கள். நமக்கு எதிராக கர்த்தருடைய வார்த்தை வரும்போது, நினிவே பட்டணத்து ஜனங்களைப்போல நம்மைத் தாழ்த்தி, பாவத்தை விட்டு மனந்திரும்புவோம். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க ஒப்புக்கொடுப்போம். எப்பேர்பட்ட பாவங்களையும் தேவன் மன்னித்து விடுவார். நாம் ஒவ்வொருவரும் பாவத்தை விட்டு மனந்திரும்பி பாவத்திற்கு விலகி வாழவேண்டும். நம்மை அழிப்பது தேவனுடைய சித்தமல்ல, அழிவுக்கு விலக்கி பாதுகாப்பதே தேவனுடைய நோக்கம். நினிவே பட்டணத்து ஜனங்களின் பாவங்கள் நம்மிடம் இருந்தால், தேவனை நோக்கி கூப்பிட்டு மன்னிப்பை பெற்றுக் கொள்வோம்.

நாமும் இன்றே கர்த்தரிடத்தில் நம்மைத் தாழ்த்தி, நமது பாவ எண்ணங்களை , இச்சைகளை விட்டு மனந்திரும்பி அவரிடத்திலிருந்து பரிபூரணமான, மெய்யான ஆசீர்வாதத்தை, அவர் சொல்லும் வழியில் நடந்து பெற்றுக்கொள்வோம். ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. | 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா




**நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்** (சங்கீதம் 23:4).

நாம் எல்லோருமே ஒரு காலகட்டத்தில் இருளின் பள்ளத்தாக்கின் வழியே செல்லுகிறோம். வேதத்திலுள்ள பெரிய மனிதர்கள் எல்லாம் கடினமான சமயங்கள் வழியே சென்றார்கள். இயேசு கிறிஸ்துவும்கூட இதற்கு விதிவிலக்கல்ல. அவருடைய சொந்த சகோதரர்கள் அவரை நம்பாத காலம் இருந்தது. அவரால் செய்யப்பட்ட அற்புதங்களையும், அடையாளங்களையும் பார்த்தபிறகும் கூட மதத் தலைவர்கள் அவரை பிசாசு என்றார்கள். அவருடைய சொந்த சீஷர்கள்கூட அவரைவிட்டு ஓடிப்போனார்கள் (யோவான் 6:66). அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட பனிரெண்டு சீஷர்களிலேயே ஒருவன் பணத்திற்காக அவரை காட்டிக் கொடுத்தான். இயேசு கிறிஸ்து வனாந்தரத்தில் 40 நாட்கள் இருந்த சமயமும் உண்டு. அவர் பிசாசை எதிர்கொள்ளவும் அவனை மேற்கொள்ளவும் செய்தார். இயேசு கிறிஸ்து, இத்தனை சூழ்நிலைகளையும் கையாண்டு வெற்றியோடு வந்தார். இயேசு கிறிஸ்துவிற்கு வேத வசனங்கள் பற்றி நன்கு தெரியும். பிசாசு அவரை சோதித்தபோது, அவனுடைய விவாதங்களை தேவனுடைய வார்த்தையைக் கொண்டு எதிர்த்து நின்றார்.

**அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம் பண்ணினார்** (மாற்கு 1:35). **அவர் ஜனங்களை அனுப்பிவிட்டபின்பு, தனித்து, ஜெபம் பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது, அங்கே தனிமையாயிருந்தார்** (மத்தேயு 14:23). இயேசு கிறிஸ்து ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரம் ஜெபிப்பதற்கு என்று வைத்திருக்கும் பழக்கமுடையவராய் இருந்தார். நமக்கு முன்மாதிரியாய் இருக்கும் அவர், கடினமான சமயங்களில் என்ன செய்ய வேண்டுமென்று நமக்கு காட்டியுள்ளார்.

அவர் சிலுவையிலறையப்படுவதற்கு முந்தின நாள், யூதாஸ் அவரைத் தேடி வருவான் என்பதை அறிந்து வைத்திருந்தார். அதினால், கெத்சமனே தோட்டத்திற்கு ஜெபிப்பதற்காகச் சென்றார். அவருடைய சீடர்களான பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை ஒரு மணி நேரமாவது ஜெபத்திலே விழித்திருங்கள் என்று வற்புறுத்தினார். ஏனென்றால், மேய்ப்பனை வெட்டுவார்கள், ஆடுகள் சிதறப்போகிறது. அவர்கள் ஜெபத்திலே தரித்திராததால் இயேசுவைப்போல இல்லாமல் ஓடிப்போக வேண்டியிருந்தது.

**அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?** (லூக்கா 18:7). அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய நாம், நம்முடைய இருளான சமயங்களில் அவரை நோக்கி கூப்பிட விரும்புகிறார். உடனடியாக அவர் பதில் அளிக்கவில்லையென்றாலும், நிச்சயமாக சரியான நேரத்தில் பதில் செய்வார். அப்போஸ்தலனாகிய பவுல், அநேக கடினமான நேரங்களையும், சோதனைகளையும், உபத்திரவங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. அப்போஸ்தலர் 20:23-ல் சொல்கிறார், **கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதைமாத்திரம் அறிந்திருக்கிறேன்.** ஆனாலும், எதற்காக கிறிஸ்து அவரை பிடித்தாரோ அதை பிடிக்க வேண்டுமென்று விருப்பப்பட்டு தொடர்ந்து சென்றுகொண்டிருந்தார். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தன்னுடைய மேலான பரம அழைப்பின் பரிசைப் பெறும்படியான இலக்கை நோக்கி தொடர விருப்பப்பட்டார். **கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்** (பிலிப்பியர் 3:12). கொலோசெயர், பிலேமோன், எபேசியர் மற்றும் பிலிப்பியர் முதலிய புத்தகங்களெல்லாம் பவுல் ரோம் பட்டணத்து சிறைச்சாலையிலிருந்த போது எழுதப்பட்டவைகளாகும்.

நமது வாழ்க்கை கடினமாகச் செல்லும்போது அவருக்கு உண்மையாக நாம் இருக்க விரும்புகிறார். அதினால் சோதனைக்குப்பிறகு அவர் சொல்வார், **நல்லது உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி** என்று (மத்தேயு 25:21). கடைசியில் நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது, மேலான அபிஷேகம், ஆசீர்வாதம் மற்றும் ஆவிக்குரிய பொறுப்பு கொடுக்கப்படும் என்று. அதற்காக நாம் தயார்படுத்தப்பட்டிருக்கிறோம். **நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது** (நீதிமொழிகள் 23:18)

இருளான சமயங்களில் ஒன்றை நாம் நிச்சயமாக உணர்ந்து கொள்ள வேண்டும். அது தற்காலிகம் என்று. மேலும், அது சீக்கிரம் கடந்து போய்விடும். தேவன் நிச்சயமாக நம்முடைய சத்துருக்களுக்கு முன்பாக ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துவார். நம் தலையை எண்ணெயால் அபிஷேகிப்பார். நம் பாத்திரம் நிச்சயமாக நிரம்பிவழியும். இயேசு கிறிஸ்து அவரது ஊழியக்காரர்கள் செழித்து இருப்பதில் களிகூருகிறார்.

தேவனுக்கே மகிமை உண்டாகட்டும். ஆமென்!




பாடுகளும், நெருக்கங்களும் நம்மை நெருக்கும்போது, நாம் கர்த்தரை நோக்கி அதிகமாக ஜெபிக்கிறோம். நெருக்கத்தின் காலத்தில், நாம் ஜெபிக்கவேண்டும் என்று நினைக்கிறோம். ஒவ்வொரு வார்த்தையையும் உணர்ந்து ஜெபிக்கிறோம். பாரம்பரியமான, சம்பிரதாயமான, நானும் ஜெபிக்கவேண்டும் என்று பேருக்கு செய்யப்படும் ஜெபம் நம்மைவிட்டு அகலுவது நெருக்கமான சூழ்நிலையின் போதுதான்.நம் ஜீவனுக்கு ஆபத்து வந்தால் எப்படி நாம் சத்தமிட்டு, யாராவது உதவிக்கு வரமாட்டார்களா? காப்பாற்ற மாட்டார்களா? என்று எப்படி கூப்பிடுவோமோ அப்படிப்போல, நெருக்கத்தின் காலத்தில் கர்த்தரை நோக்கி சத்தமிட்டு கூப்பிடுவோம்.

**கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன்; கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன். அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்; அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்** (சங்கீதம் 141:1-2). இது தாவீதின் அனுபவம். தன்னுடைய நெருக்கத்தின் காலத்தில், தான், கர்த்தரை நோக்கி சத்தமிட்டு கூப்பிட்டதாகவும், கெஞ்சியதாகவும் குறிப்பிடுகிறான். அதோடு மட்டுமல்ல, தன்னுடைய மன பாரங்களை வார்த்தைகளாய் மாத்திரமல்ல, கண்ணீராய் கர்த்தருடைய சமூகத்தில் ஊற்றினதாகக் கூறுகிறான்.

கர்த்தருக்கும் நம் நெருக்கம் தெரியும். இன்றைக்கு நமக்கு இருக்கும் நெருக்கத்தைக் கர்த்தர் முன்னரே அறிவார். நமக்கு நெருக்கம், சோர்வு, ஆபத்து வரும்போது, அவருடைய உதவி நமக்குத் தேவை என்பதை அவர் அறிந்து வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவரை நோக்கி நம்மை கூப்பிடச் சொல்லுகிறார்.

**ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்** (சங்கீதம் 50:15). இது ஆசாபின் சங்கீதமாகும். கர்த்தர் ஆசாபிடம், இப்படியாக கூற, அவன் பாடுகிறான். நாம் பாடும் பாடல்களும் இப்படிப்போலத்தான். நம்முடைய உள்ளத்திலிருக்கும் காரியங்களைக் கர்த்தரிடத்தில் பாடல்கள் மூலமாக வெளிப்படுத்துகிறோம். **ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்** (சங்கீதம் 65:2).

இங்கே தாவீது கர்த்தரைப் பார்த்து, என் ஜெபத்தைக் கேட்கிறவரே என்று பாடுகிறான். அத்துடன் முடித்துவிடவில்லை. மனுஷர்கள் யாவரும் உம்மிடம் ஜெபத்தின் மூலமாக வருவார்கள் என்பதையும் குறிப்பிடுகிறான். நமக்கு உதவி செய்வது அவரே. எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் உதவி செய்ய அவரால் மாத்திரமே முடியும். அவரைப்போல உதவி செய்ய வேறு யாராலும் முடியாது. மனிதனால் செய்ய முடியாததை செய்ய அவராலே முடியும். நம்முடைய பரம தகப்பன், சர்வ வல்லமையுள்ள தேவன். **மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார். என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக** (சங்கீதம் 66:19,20). இங்கே சங்கீதக்காரன் தன்னுடைய ஜெபத்தைக் கர்த்தர் கேட்டார் என்றும், தன்னுடைய ஜெபத்தை அவர் தள்ளிவிடவில்லை என்றும் குறிப்பிடுகிறான். மனிதர்கள் நமக்கு செவிகொடுக்காமல் போகலாம், நம்மையே மறுக்கலாம், புறக்கணிக்கலாம். ஆனால், நம்முடைய பரம தகப்பன், எப்போது நாம் ஜெபித்தாலும் அதைக் கேட்கிறவராய் இருக்கிறார்.

கர்த்தரை நோக்கி ஜெபிக்கும்போது, கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தங்களை உறுதியோடு பிடித்துக்கொண்டு அவற்றைச் சொல்லி கர்த்தரிடம் கேட்போம். இதுவரை இல்லாத அளவு கர்த்தருடைய வேதத்தை மிகவும் கவனமாகப் படிக்கவும், தியானிக்கவும் ஆரம்பிப்போம். சூழ்நிலையின் நெருக்கம், நம்மை கர்த்தரை நெருங்க வைக்கின்றது. மற்ற மனுஷர்களின் பாடுகளை, நெருக்கங்களை உணர ஆரம்பிக்கின்றோம். மற்றவர்கள்மீது உண்மையாக அன்புகூர ஆரம்பிக்கின்றோம். நம்முடைய வாழ்க்கையிலும், மற்ற மனுஷர்களுடைய வாழ்க்கையிலும், சமாதானம் எவ்வளவு முக்கியம் என்பதை உணருகிறோம். அதற்கேற்ப நமது வாயின் வார்த்தைகள், செய்கைகள் மாறுகிறது. மேலோட்டமான வாழ்க்கை, நம்மைவிட்டு அகலுகிறது. அழுத்தமாக, நிறுத்தி கவனமாக எழுதுவதுபோல வாழ ஆரம்பிக்கிறோம். மற்ற மனுஷர்களோடு பேசுவதும், பழகுவதும், பேருக்கு ஏதோ பேசினேன், பழகினேன் என்று இராதபடி உண்மையாகப் பேசவும், பழகவும் ஆரம்பிக்கிறோம்.

நெருக்கத்தினால், போராட்டத்தினால் நமக்கு சோர்வு, துக்கம், கலக்கம், வெறுப்பு வருகின்றது. இவற்றைப் பற்றியெல்லாம் சிந்திக்க ஆரம்பிக்கின்றோம். **வாழ்வு காலத்தில் நன்மையை அநுபவித்திரு, தாழ்வு காலத்தில் சிந்தனை செய்; மனுஷன் தனக்குப்பின் வருவதொன்றையும் கண்டுபிடியாதபடிக்கு தேவன் இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்** (பிரசங்கி 7:14).

இங்கே சாலொமோன், நம்முடைய வாழ்க்கையில் சந்தோஷமான நேரத்தில் நமக்கு கிடைத்த ஆசீர்வாதங்களை அனுபவிக்கச் சொல்லுகிறான். நம்முடைய வாழ்க்கையில் நெருக்கங்கள், துக்கங்கள் வரும் நேரத்தில் சிந்திக்கச் சொல்லுகிறான். எதைப்பற்றி சிந்திப்போம்? ஏன் இந்த கஷ்டம்? என்று நம்மை நாமே கேட்போம். பின்னர் அதற்கானப் பதில்களைப் பெற்றுக்கொள்ள பிரயத்தனப்படுவோம். அப்போது நம்முடைய

வாழ்க்கையைக் குறித்து யோசிக்க ஆரம்பிப்போம். நமக்கு பரிச்சயமான மற்ற மனுஷர்களுடைய வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க ஆரம்பிப்போம். இவற்றை யெல்லாம் ஏன் கர்த்தர் இப்படி உண்டாக்கியிருக்கிறார் என்று ஆழமாக யோசிக்க ஆரம்பிப்போம். கர்த்தர், மனுஷன், வாழ்க்கை இந்த மூன்றுக்கும் உள்ளத் தொடர்பை புரிந்துகொள்ள முயற்சி செய்வோம். அதனுடைய பலனாக, பதிலாக நாம் பெறுவது, கர்த்தர் யார், எப்படிப்பட்டவர், எந்த நோக்கத்தோடு சகலத்தையும் சிருஷ்டித்துள்ளார், முக்கியமாக மனிதனை எந்த நோக்கத்தோடு உருவாக்கியுள்ளார், அவனுடைய வாழ்க்கையின் நோக்கம் என்ன, எப்படிப்பட்ட வாழ்க்கையை அவன் வாழ வேண்டும், இந்த எல்லாக் காரியங்களின் பின்னணியில் இருக்கும், மறைந்திருக்கும் நாம் யார், நம்முடைய வாழ்க்கை என்ன என்பது திட்டமும் தெளிவுமாக நம் மனக் கண்ணில் தோன்றும்.

இந்த நெருக்கடியான கால கட்டத்தில் தான், நம்மை உண்மையாய் நேசிப்பவர்களை இன்னின்னார் என்று கண்டு கொள்கிறோம். அவர்களது பேச்சை நன்கு கவனித்து அதைப்பற்றி யோசிக்கவும், அதின்படி செயல்படவும் செய்கிறோம்.

நெருக்கடியான சூழ்நிலை நீடிக்கும் போது, கர்த்தர் நிச்சயம் உதவி செய்வார் என்று நம்பிக்கையோடு, அதற்காகக் காத்திருக்க ஆரம்பிக்கிறோம். அதினிமித்தம் நமக்கு பொறுமை வருகின்றது. **கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்** (சங்கீதம் 40:1).

இங்கே தாவீது சொல்வது, தன்னுடைய சூழ்நிலையில் கர்த்தர் இடைபட்டு உதவி செய்யும்வரை பொறுமையாய் காத்திருந்தேன் என்றும், தன்னுடைய ஜெபத்திற்கு பதில் தந்தார், அதாவது அந்த குறிப்பிட்ட சூழ்நிலைக்கு கர்த்தர் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்தார் என்றும் குறிப்பிடுகிறான். நெருக்கமோ, துக்கமோ, கலக்கமோ, துன்பமோ நம்மை கர்த்தரை விட்டு விலக்கிவிடாமல், நாம் கர்த்தரோடு நெருங்கி இருக்க வைப்பது இந்தப் பொறுமையே.

**உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்** (யாக்கோபு 1:3). நாம் கர்த்தரையே நம்பியிருக்கிறோம். இதுவே நமது விசுவாசம். ஆனால் நமக்கு காரியங்கள் நடக்காதபோது, கர்த்தர்மேல் நாம் வைத்துள்ள விசுவாசம் அசைக்கப்படுகிறது. காரியங்கள் நடக்காமலே காலங்கள் நகரும்போது, நம்மை சூழ்நிலைகள் அழுத்தும்போது, கர்த்தர் அந்த நேரத்தில் நாம் எதிர்பார்ப்பதைச் செய்யவில்லை என்பதை நாம் காணும்போது, கர்த்தர் நம்மை மறந்துவிட்டாரா? அல்லது கர்த்தர் நம்மைவிட்டு விலகிவிட்டாரா? என்று எண்ணத் தோன்றும். ஆனால், அதையும் மீறி, கர்த்தர் கர்த்தர்தான்; அவர் மனுஷன் அல்ல. மனம்மாற மாட்டார். என்னை அவர் நேசிப்பது உண்மை. நிச்சயமாக எனக்கு உதவி செய்வார் என்ற நம்பிக்கையோடு கர்த்தருக்காகக் காத்திருப்பதே பொறுமை.

கஷ்டத்தின் மத்தியிலும் கர்த்தரை உண்மையாய் நேசிக்கிறோம். இதுவே உண்மையான அன்பு. யோபு எவ்வளவோ நெருக்கப்பட்டான். ஆனால், அவன் தேவன்மீது வைத்திருந்த அன்பைவிட்டு விடவில்லை.



அதேபோல யோசேப்பும், மிகவும் கடினமான, போராட்டமான பாதையில் சென்றபோதும் கர்த்தரை விட்டுவிலகவில்லை. தாவீதும், தானியேலும், பவுலும்கூட கர்த்தரைவிட்டு விலகவில்லை. இவர்களெல்லாம் கர்த்தர் தங்களுக்கு விடுதலை தரவேண்டுமென்பதற்காகவோ, அற்புதம் செய்யக் கூடிய வல்லமையுடையவர் என்பதற்காகவோ அவரை சார்ந்து இருக்கவில்லை. கர்த்தர் அவர்கள்மீது வைத்திருந்த அன்புதான் காரணம். **தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம்** (1 யோவான் 4:16). அப்போஸ்தலனாகிய யோவான், தன்னுடைய விசுவாசத்தை இப்படியாகக் குறிப்பிடுகிறான். கர்த்தர் அவன்மீது வைத்துள்ள அன்பின்மீது அவனுடைய விசுவாசத்தை வைத்துள்ளதாகக் குறிப்பிடுகிறான். சூழ்நிலைகள் அவர்களுடைய உறவை துண்டிக்கவில்லை, பாதிக்கவில்லை. சூழ்நிலைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதான உறவு. **கிறிஸ்துவின் அன்பை விட்டு, நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ நிர்வாணமோ, நாசமோசமோ பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும் வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயத்திருக்கிறேன்** (ரோமர் 8:36-39). அப்போஸ்தலனாகிய பவுல், தான் எவ்வளவாய், கர்த்தரை நேசிப்பதாய் குறிப்பிடுகிறான். அவனுடைய வாழ்க்கையின் கஷ்டங்கள், நெருக்கங்களைப் பார்த்து கர்த்தரை விட்டு விலகவில்லை. தன்னுடைய சூழ்நிலைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு கர்த்தரை நேசிக்கிறான்.

இதையே கர்த்தர், நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார். நமக்கும் அவருக்குமிடையே உள்ள உறவை சோதித்து அறிய விரும்புகிறார். அவர் நம்மீது வைத்துள்ள அன்பு ஒருநாளும் மாறாது. காலங்கள் மாறினாலும் அவருடைய அன்பு மாறாது. நாம் அவர் மீது வைத்துள்ள அன்பை சோதித்து அறிகிறார். நமக்கும் அவருக்குமிடையேயான உறவு மேலோட்டமாக இராமல், ஆழமாக இருக்க விரும்புகிறார். அவருடைய அன்பை நாம் முழுமையாகப் பெற்றுக் கொள்ள விரும்புகிறார். அதற்கான வழி இதுவே. அவரையே பெற்றுக் கொள்ளும்படியாக நம்மை நடத்துகிறார். கர்த்தரைப்போல நம்மை யாராலும் நேசிக்க முடியாது. அந்த அன்பினிமித்தம்தான் இத்தனை பாடுகளும், உபத்திரவங்களும்.

ஆகவே, உங்களது பாடுகளையும் நெருக்கங்களையும், துக்கங்களையும் பார்த்து கலங்காதீர்கள். ஜெபத்தினாலும், கர்த்தருடைய வார்த்தையை தியானிப்பதினாலும் கர்த்தரை நெருங்குங்கள். இரட்சகர், ஆம், விடுதலை நாயகன் இயேசு கிறிஸ்துவை உங்களின் ஆத்தும நங்கூரமாக்கிக் கொள்ளுங்கள். அப்போது எதுவும் உங்களை அவரைவிட்டு பிரிக்க முடியாது.

கர்த்தரின் சித்தமே உங்களது வாழ்க்கையில் நடக்கும் அவரது சித்தமில்லாமல் எதுவும் நடப்பதில்லை. ஆமென்!